கொடுத்து தேயிலை வாங்கியிருக்கிறார்கள். இப்போது கூட்டுறவுத் தொழிற்சாலை ஏற்பட்ட பிறகு அவர்கள் நல்ல விலை கொடுத்து வாங்குகிறார்கள். மிகக் குறைவாக விலை கிடைக்கிறது என்ற புகார் இருக்குமானால் அரசு நிச்சயமாக அதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, டீ கார்ப்பரேஷன் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். அவர்களுடைய பணி என்ன? இப்படி ஏற்கனவே சிறு விவசாயிகளிடமிருந்து அந்தத் தேயிலையை கொள்முதல் செய்வதற்குத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கக்கூடிய சிறு விவசாயிகள் இரண்டு விதமாக தங்களுடைய தேயிலையை விற்பனைக்குக் கொடுத்து வருகிறார்கள். ஒன்று கூட்டுறவு முறையில் தொழிற்சாலை நடத்தி, அதில் அந்தத் தேயிலையைப் பயன்படுத்தி, அதன் மூலம் நியாயமான விலையை, நல்ல விலையை அவர்கள் பெறுகிறார்கள். பிறிதொன்று, தனியாரிடத்திலும் உள்ள தொழிற்சாலைகளுக்கு அவர்கள் பச்சைத் தேயிலையைக் கொடுத்து வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற புகார் சொல்லப்பட்டு வருகிறது. இது உண்மையானால் நியாயமான விலை கிடைக்க அரசு தீவிரமான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயத் தேர்.

*வினா எண். 666— திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஸ்ரீசுப்ரமணிய சுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான பெரிய தேரில் விலை மதிக்க முடியாத சிற்ப வேலைப்பாடு அமைந்த மா சிற்ப சிலைகள் திருட்டு போயிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[1979 எப்ரல் 17

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) தேரிலிருந்து களவாடப்பட்ட மரச் சிற்பங்கள் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு, களவில் சம்பந்தப்பட்ட ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி களவு சம்பந்தமான புகார் பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது. கைப்பற்றப்பட்ட 13 மரச் சிற்பங்கள் காவல் துறையினரிடம் உள்ளன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, அந்தப் பெரிய தேரிலிருந்த மொத்த சிற்பச்சிலைகள் எத்தனை? திருட்டுப்போன சிற்பச்சிலைகள் பொருத்தப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மொத்தச் சிற்பங்கள் அந்தத் தேரில் இருந்தது— 773. அதிலே களவு போனது என்று கூறப்படும் சிற்பங்கள் 13. கீழே விழுந்து போய் எடுத்து வைக்கப்பெற்று இருப்பவை 6, காலத்தால் சிதைந்து அழிந்து போனவை 74. மொத்தம்—773.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் களவு போன மொத்த பொருள்கள் எண்ணிக்கை கூறினார்கள். எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரையில் அந்தக் களவு போய் இருக்கிறது. களவு போன அப்பொருள்களின் மதிப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன். களவு செய்ததற்கும், அந்தக் கோயிலில் உள்ளவர்களுக்கும் தொடர்பு உண்டா அல்லது வேறு எந்த நபருக்காவது தொடர்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற மாசி திருவிழாவை முன்னிட்டு தேரை பிரித்த போது அந்தச் சிற்பங்கள் களவு போனது கண்டறியப்பட்டது. அதை ஒட்டி 1978 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 15-ந் தேதி அன்று காவல்துறை ஆய்வாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு அந்த 13 மர பொம்மைகள் கைப்பற்றப்பட்டன. அதன் மொத்த மதிப்பு ரூ. 600. கைது செய்யப்பட்டவர்கள் இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்று போலீஸ் துறை குற்ற வழக்குப் பதிவு செய்ததில் தெரிகிறது. அதிலே ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் ஈடுபட்டு இருப்பதாகவோ சம்பந்தப்பட்டு இருப்பதாகவோ தகவல் இல்லை.

1979 ஏப்ரல் 17]

(முற்பகல் 9-10)

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான மின்சார வொயர்கள், காயில்கள், சுவிச்சுகள் ஆகியவை திருடு போயிருப்பது உண்மையா, அதற்கு அங்குள்ளவர்களே உடந்தை என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைச் தலைவர் அவர்களே, இது தேரிலே உள்ள சிற்ப வேலைப்பாடு அமைந்த மரச் சிற்பங்கள் திருடு போனதைப்பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய தகவல் தருகிறார்கள். விளக்கமாக விவரங்கள் எழுதித் தந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை.

*வினா எண். 667— திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென மதுரை நகரில் உள்ள ராணி மங்கம்மாள் சத்திரத்தை தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. என். லட்சுமிநாராயணன்: பேரவைத் தலைவர் அவர்களே அடுத்த ஆண்டு மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெறப்போவதாகச் சொல்லப்படுகிறது. தற்பொழுது உள்ள விடுதிகளில் போதுமான படுக்கை வசதிகள் இல்லை, எனவே உடனடியாக படுக்கை வசதிகளை அதிகப்படுத்த ஏதேனும் திட்டங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதனை தனிக் கேள்வியாகப் போட்டால் விவரங்கள் தேவையான அளவிற்கு சேகரித்துத் தரமுடியும். என்றாலும் இதற்கென புதிய விடுதிகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS